# பட்டமரம் ஒரு பாடம் புகட்டுது

## காரை.செ.சுந்தரம்பிள்ளை

பட்ட மரமொரு பாடம் புகட்டுது
பாரினில் வாழ்வு நிசமல்ல என்பதை
இட்ட மரமடி கூத்துக்க ளாடி
எல்லாமே மெய்யென எண்ணி யிருந்து
கெட்டத் தனங்கள் பலப்பல காட்டி
கேவல மான செயல்நூறு செய்து
சட்டங்கள் கூறித் தருமங்கள் கொன்று
தார்மீகம் பேசித் தரணியு மாண்டோம்.

ஆற்று மணலிற் கயிறு திரித்து
அந்தக் கயிற்றில் வலைசில பின்னி
காற்றில் படுத்துவிண் மீன்கள் பிடித்து
கானல் நீரிற் குழம்பாக்கி யெடுத்து
சேற்றில் நறுமண வுண்டிகள் சுட்டு
செத்த பிணத்தில் நறுநெய் வடித்து
சாற்று மறுசுவை யுண்டியென் றூட்டத்
தலைப்பட்ட பேரெல்லாம் தலைகீழாய் ஆனார்.

எங்கள் இனம்பெரி தென்றுமே துள்ளி
எங்கள் மொழிசிறப் பென்றுமே கத்தி
எங்கள் நிலம்உயர் வென்று துடித்து
எங்கள் மரம்அரி தென்று புலம்பி
தங்கள் சுயநலம் காக்க முயன்று
தாரணி தன்னில் தகாதன செய்து
பொங்கி யெழுந்தோர் வரலாற்றைப் பாரீர்
பொசுங்கி யழிந்தனர் வேறென்ன கண்டார்

மானிடம் தன்னை மதித்துயி ரோம்பி
மன்னுயிர்க் காகவே தன்னுயிர் ஈயும்
வானவர் ஒத்தவர் வாழ்வத னாலே
வையகம் வாழ்வதாய் நல்லவர் சொல்வர்
ஈனச் செயல்களைத் தீக்கிரை யாக்கி
இல்லாமை தன்னையிங் கில்லா தொழித்து
மான முடன்மனி தப்பண்பு காப்போர்
மரணத்தை வென்றுபல் லாண்டிங்கு வாழ்வர்

**மாத்தளை**
**சிறப்பு - 1**

இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா அவர்கள் ஆரம்பக் கல்வி கற்றது மாத்தளை கிறிஸ்தவ தேவாலயக் கல்லூரியில் - 'கிறைஸ்ட்சர்ச்"